# நவீன பெண் கவிகளில் பாரதியின் தாக்கம்

## Impact of Bharathi in Modern Female poet's

**முனைவர் போ.அனு**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பூ.சா.கோ.கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 011

**Dr B.Anu**, Assistant Professor, Department of Tamil, PSG College of Arts and Science, Coimbatore – 011

DOI : 10.5281/zenodo.7567962

### Abstract

Literature is a work of art created by man. Through literature, one can learn about the events taking place in the society and the events that have been completed. It is related to human life. Tamil literature has been developing from time to time. At the same time they are also changing from time to time. In each work, the new thoughts of the creator will come out with scholarly pursuits. This aspect varies according to the inner quest of man. A new variation in literary design will occur in the competition. New poems composed in this way have a special place in terms of word form and comprehension. Male poets like Abdul Rahman, Vairamuthu, Tamilanban and Chipi are creating their poems with feminist thought.

### ஆய்வுச்சுருக்கம்

இலக்கியம் என்பது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு கலை படைப்பாகும். சமுதாயத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் நடந்து முடிந்த நிகழ்ச்சிகளையும் இலக்கியத்தின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. இது மனித வாழ்க்கையொடு தொடர்புடையது. தமிழ் இலக்கியங்கள் காலந்தோறும் வளர் நிலையைப் பெற்று வந்துள்ளன. அதே நேரத்தில் காலந்தோறும் மாறிவரும் தன்மையும் உடையன. ஒவ்வொரு படைப்பிலும் படைப்பாளியின் புதிய சிந்தனை ஓட்டங்கள் புலமை நாட்டத்தோடும் வெளிவரும். இப்புலமை மனிதனின் அகப்புற தேடலுக்கு ஏற்ப வேறுபடும். அத்தேடலில் இலக்கிய வடிவமைப்பில் புதிய மாறுபாடு நிகழும். அவ்வகையில் அமைந்த புதுக்கவிதை சொல் வடிவத்திலும் புரிதல் திறத்திலும் தனியிடத்தைப் பிடித்துள்ளன. புதுக்கவிஞர்களாகிய அப்துல் ரகுமான், வைரமுத்து, தமிழன்பன், சிற்பி போன்ற ஆண் கவிஞர்கள் பெண்ணியச் சிந்தனையோடு தங்கள் கவிதைகளைப் படைத்து வருகின்றனர்.

**Keywords:** பாரதி, பெண்ணியம், பாரதியம், பெண் கவிஞர்கள், தற்காலம், பெண் சிந்தனைகள்.

### முன்னுரை

பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா என்று மகாகவி பாரதியைப் பாடத் தூண்டியது எதுவெனில் அடிமைப்பட்டு கிடந்த பெண் சமுதாயத்தின் ஆறாத வடுக்குள்தான். காலத்தின் பாதையில் பல துயரங்களைக் கூட கடந்து வந்திருந்தாலும் பெண்கள் முழுமையாக விடுதலை அடையவில்லை என்பது தான் உண்மை. ஆணின் அதிகாரம் தன்னை முதன்மைப் படுத்தி ஆண்வழிச் சமூகமாக மாற்றியது வரலாறு. வரலாற்றைத் தாண்டி இன்றைய இயல்பான வாழ்விலும் ஆணைவிட பெண் தான் மிகுதியான துன்பத்தை அனுபவிக்கின்றாள். பெண்கள் குடும்ப அமைப்பிலும் சமூக அமைப்பிலும் பல்வேறு வாழ்வியல் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

சாதி சமயம் மற்றும் சமுதாய பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் போன்றவற்றால் பெண்கள் ஒடுக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் வருகின்றனர். அவ்வகையில் பெண்கவிகளின் படைப்பில் மகாகவியின் சிந்தனை இழையோடி இருப்பதை எடுத்துரைக்கும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

**பெண் கவிகளில் பெண்**

சங்க காலத்தில் சிறப்புற்றிருந்த பெண்களின்நிலை இடைகாலத்தில் தாழ்ந்துபோனது.பக்தி இயக்க காலத்தில் சமயத் தொண்டாற்றினர். புராணங்களில் காவியங்களில் பெண் பெருமைப்படுத்தப் பட்டாளே தவிர வாழ்க்கை நடைமுறையில் தாழ் நிலையிலேயே இருந்தாள். பிற்கால்த்தில் தான் பெண்ணை கல்வி வீரம் ஆகியவற்றில் ஆணுக்கு சமமாக கருதப்பட்டாள். மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் என்ற கவிமணியின் வரிகளுக்கு ஏற்ப பெண்கள் தங்களுடைய தனித்தன்மைகள், சிறப்புகள், விருப்பங்கள், ஆளுமைத்திறன், நம்பிக்கைகள் ஆகியவற்றைத் உணர்த்தி வருகின்றனர்.

புதுக்கவிதைக்கும் பெண்ணியத்திற்கும் புத்துயிர் ஊட்டும் வகையில் பாரதி படைப்புகள் அமைந்தன. புதுமைப்பெண்ணைப் படைத்தான். பெண்ணிய உரிமையைப் பறைசாற்றினான். பெண்விடுதலைக்குக் கும்மியடித்து பெண்ணடிமையை எதித்தார். சுதந்திரத்தை சுவாசிக்க செய்த பாரதியின் வழிவந்த பெண் கவிஞர்களும் பாரதியின் சாயலையும் கருத்தையும் அவரவர் நடையில் வடிவமைத்தனர்.

**பெண்மைப் போற்றல்**

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவொம் என்று பெண்ணுரிமைக்காக் குரல் கொடுத்தவர் பாரதி. பெண்களை நாட்டின் பெரிய சக்தியாகவே மதித்தார். அவருடைய ஒவ்வொரு சொல்லும் பெண்களை தட்டியெழுப்பி தங்களது உரிமைக்காக போராட வைத்தது.

பெண்கள் பிறப்பே பாசம் என்று கருதும் காலத்தில்தான் பாரதி புதுமைப் பெண்ணுக்கு இலக்கணம் வகுத்து போற்றினார். ‘அறிவின் வலிமையே வலிமை’ என்பதால் நிமிர்ந்த ஞானச்செருக்கு இருப்பதால் செம்மை மாதர் திரும்புவதில்லையாம்’ என்ற பெரும் நம்பிக்கையை பெண்கள் மீது வைத்தார். இதன் நீட்சியாக கவிஞர் வெண்ணிலா தாய்மையைப் போற்றி தாய்க்கு மேல் ஒரு தெய்வம் உண்டொ என்று வினவுகையில் பெண்மையைப் போற்றும் நெறியை உணரமுடிகிறது

**அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்றே**
**ஆணினம் ஏய்த்த ஏட்டைத் திருப்பு**
**வீட்டுச் சிறையில் சிறகைச் சுருக்கி**
**விரிக்கப் பயந்து கிடந்தது போதும்**
**பூட்டிய இரும்பு கூட்டினை உடைத்து**
**புதிய சரித்திரம் படைக்க வாராய் (பாடும் நிலா ப, 9)**

என்ற வெண்ணிலாவின் வரிகள் பெண் விடுதலை பெறுவதற்கான வழிகளை எடுத்துக்காட்டி நம்பிக்கையூட்டுகிறது.

**பெண்கல்வியும் சமத்துவமும்**

புதுமைப் பெண்களுக்கு அடிப்படைத் தேவை கல்விஞானம் என்பதை 'ஞானம் நல்லறம் வரும் சுதந்திரம் நற்குடி பிறப்பு' என்கிறார் பாரதியார். பென்களுக்கு மறுக்கப்பட்ட கல்வி தேவை. ஏனெனில் கல்வி கற்றப் பின்னரே சமூகத்தில் சமத்துவம் வளர ஆரம்பித்தது எனலாம். இன்றைக்கு பெண்கள் பல துறைகளிலும் சாதிக்கின்றனர். பாடசாலைகள் பல்கலைக் கழகங்கள் தொழில் நிறுவனங்கள் எல்லாவற்றிலும் பெண்கள் சாதிக்க பெண்கல்வி வளர்ச்சியைடந்தமையே காரணமாக இருக்கிறது.

சமுதாய வளர்ச்சி என்பது கல்வி வளர்ச்சியைப் பொறுத்தே அமைகிறது. அதிலும் பெண்கல்வி அடுத்தடுத்து வளர்ந்து வரும் சமூகத்தின் நிலையையும் சேர்த்து வளர்க்கும். பெண்கள் அறிவை வளர்த்தால் பேதமை அகற்றிடும் காணீர் (பாரதியார் கவிதைகள் பா.243)

என்ற பாரதியின் வரிகளுக்கேற்ப விழிப்புணர்வு பெற்ற கல்வியின் பெருமையைaனைவரும் உணரும்போதுதான் உலகம் உயர்வடையும் என்ற கருத்தை மரியசெல்வம்

**கல்வியால் உலகமே உய்வுறும் காணீர்**
**அறியாமை இருளதே அகன்றிடும் பாரீர்**
**இல்லாமை இல்லாத வரும் நன்னாள்**
**எல்லோரும் கற்றோராய் உருப்பெரும் பொன்னாள் (விடியலைத் தேடி ப.11)**

என்று தெளிவுப்படுத்துகிறார்.

**புதுமைப்பெண்**

இடைகாலத்தில் உடல் வலிமையையும் உடல் உழைப்பையும்வைத்தே ஆண் இனத்தை முதன்மைப் படுத்தி பெணினத்தை இரண்டாம் தரமாக் கருதியது. அன்றைய விவசாயத்தை அடிப்படையாக கொண்ட சமூகம் ஆண்களின் வலிமையையும் ஆண் குழந்தைகளின் நலனையும் மட்டுமே சிறப்பாகப் போற்றியது. வலிமை குன்றியவர் என்று எண்ணி வீட்டுக்குள்ளேயே கட்டுப்பாடுகளோடு முடக்கி வைத்தனர். இதனைக் கண்ட பாரதி பெண்ணின் தன் ஆர்வ சக்தி அவளது மனவலிமையில் உள்ளது என்று கோபத்தில் முழங்கினான். சுதந்திர வேட்கையை தூண்டி பெண்களுக்கு கல்வி உரிமை வேண்டும் என பல போராட்டங்களை நடத்திய பாரதி தன் எழுத்துகளால் தனது கருத்துகளை பெண்கள் மனதில் பதித்தவர்.

'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்த்வோம்'

என்று குரல் கொடுத்தவர் அப்பெண்களை நாட்டின் பெரிய சக்தியாகவே பார்த்தார். அவருடைய ஒவ்வொரு வார்த்தையும் பெண்களை தட்டியெழுப்பி தங்களது உரிமைக்கு போராட வைத்தது இக்கருத்தினை சியமளா பேபி புதுமைப் பெண் நிமிர்ந்து நடந்து நேருக்கு நேர் பார்த்து ஆணுக்கு பெண் சமம் என்றே முழங்குவாள்.யாருக்கும் அடிமையில்லை என்ற கருத்தையே தன் கவிதையில் கூறுகிறார்.

**இவள் ஒரு புதுமைப் பெண்**

**தன் கையால் உழைத்துண்ணும்**

**த த் துவம் கொண்டவள்**

**மற்றவர் உழைப்பினில்**

**வாழ்க்கை வெறுப்பவள் (சியாமளா பேபி, உலகை செதுக்கும் உளி, ப 37)**

என்ற வரிகளில் பாரதியின் கவிவரிகளான நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளும் என்ற பாரதியின் முழக்கம் ஒலிப்பதை உணரமுடிகிறது

**பெண் விடுதலை**

பெண்கள் முன்னேற்றம் பற்றிய ஒவ்வொரு கட்டுரையிலும் பாரதி மீண்டும் மீண்டும் சொல்வது பெண்கள் கல்வி அறிவுப் பெற வேண்டும் என்பதைத் தான். விடுதலை என்பது யாரும் கொடுத்து பெறுவது அல்ல. என்பதையும் சொல்லி கல்வி அறிவு பெற்ற பெண்கள் அதைத் தாமே தேடிக் கொள்ள வேண்டும் என்கிறார். விதவைபெண் பற்றியும்பெண் என்பவர்கள் 'கணவர்களை இழந்தவர்களே யன்றி உடம்பை இழக்கவில்லை. ஐம்புலன்களை இழக்க்வில்லை உணர்வை இழக்கவில்லை, காம விருப்பத்தை இழக்கவில்லை, அவர்கள் கல்லாய்விட வில்லை என்ற கருத்தை ஆணித்தரமாகப் பதிவு எய்கிறார் பாரதி

'பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புவி பேணி வளர்த்திடும் ஈசன்

மண்ணுக்குள்ளே சில மூடர் அந்த மாதர் அறிவினை கெடுத்தான்

என்று பாடுகிறார் பாரதியார்.

இக்கருத்தினை பெண்கவிகளாகிய மதுமாலிகா, ஆனந்தி, சித்ரா என பலரும் தம் கவிகளில் எடுத்துக்காட்டியுள்ளனர். கணவன் இறந்தபிறகு வெள்ளாடை உடுத்தலும் பூ, பொட்டு மற்றும் அணிகலன்கள் நீக்கப்பட்டுக் கரையும் இருளுக்குள் இவளின் கனவுகள் கருகிய காட்சிகளாய் உதிர்ந்த பூக்களாய் சிறைபட்டு விதி பொம்மைகளோடு நிறுத்திவைக்கப்பட்ட மதியற்ற மண்பொம்மையாகக் காட்சியளிக்கிறாள்.

**விழியெங்கும்**

**இன்ப கனவோடு எதிர்பார்ப்பு**

**விடையோ**

**ஏமாற்று சாம்பல் நினைவோடு**

**அன்று**

**பலவண்ண அலைகள் இதயமெங்கும்**

**இன்றோ**

**வறண்ட பாலைவனக்காற்று**

**வந்துபோன மணல்மேடுகள்**

**வாழ்க்கைப் பாதையெங்கும்**

**(திலகவதி, வெற்றியின் வெளிச்சம் காண் பக் 69-70)**

பெண்கள் இயல்பிலேயே சிறப்புடையவர்கள் இந்த உலகத்தின் உயிர்களை சிருஷ்டிக்கும் பெண் எமது சமூகத்தில் போற்றப்பட வேண்டியவர்கள், இயல்பாகவே அறிவும் மனவலிமையும் மிக்க பெண்கள் சில மூட நம்பிக்கை மிக்கவர்களால் அடக்கப் படுகிறார்கள்

பெண்களுக்கு கல்வி மறுத்து அவர்களை சிறுவயதில் திருமணம் செய்து வைத்தல், கணவன் இறந்தவுடன் உடன்கட்டை ஏற செய்தல், வீட்டுக்குள் அடக்கிவைக்கும் முறைகள் காணப்பட்டன. இதனால் சமூகத்தில் பெண்கள் தங்கள் கனவுகளையும் ஆசைகளையும் தொலைத்து காலம் முழுதும் கண்ணீரில் உழன்றனர். இன்றைக்கு பெண்கள் கல்வி முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதால் பெண்கள் இன்று வன்முறைகளுக்கு எதிராக அச்சமின்றி குரல் கொடுத்து வருகின்றனர். அதன் கண்ணோட்டத்தில் கவிஞர் ஆனந்தி மனித நேயப் பூ என்ற கவிதையில் முற்போக்கு சிந்தனையை முன்வைக்கிறார். இதுபோன்றே பல கவிஞர்களும் விதவைப் பெண்கள் பிறரால் ஒதுக்கப்பட்டு ஜடப்பொருளாக கருதப்படுவதைச் சுட்டிக்காட்டி மறுமணம் செய்துகொள்வதற்கு முன்வர வேண்டும் என்பதை வலியுறுத்தி காட்டுகின்றனர்.

**இன்றைய பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள்**

இன்றைக்கு பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு அடக்குமுறை மிக்க சமூகமே காரணாமாக இருக்கிறது. பெண்பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைத்தவுடன் பெற்றோர்களின் கடமை முடிந்த்தாக கருதுகிறார்கள். இதனால் பெண்களின் கனவுகள் சிதைந்து போகின்றன. திறமையும் அறிவும் இருந்தாலும் கூட பெண்களை விரும்பிய துறையில் செல்ல குடும்பங்கள் அனுமதிப்பதில்லை. வீடுகளில் இருக்கும் பெண்கள் அதிகம் குடும்ப வன்முறைகளால் பாதிக்கப்படுகின்றனர். பிரச்சனைகளுக்கு நியாயம் கேட்குமளவுக்கு தைரியமும் அறிவும் இல்லாமையினாலேயே பெண்கள் அடக்கப்படுகின்றனர். இந்நிலைமை இன்று கணிசமாக மாறியுள்ளது.

**பந்தயங்களில் பணயமாக்கப்பட்டேன்**
**கோயில்களில்**
**விக்கிரகங்களாக்கப்பட்டேன்**
**எனக்காய்ப் போர் தொடுத்தார்கள்**
**கவர்ந்தவனிடமிருந்து மீட்டார்கள்**
**காவியம் படைத்தார்கள் (கனிமொழி, கருவரை வாசனை ப. 35)**

**முடிவுரை**

பெண்கவிகள் பெண் சமூகம் முன்னேறுவதற்கான பாடுபொருளைக் கொண்டு பல கவிகள் படைத்துள்ளனர். அவற்றுள் பல்வேறு தளங்களில் பெண்கள் கொடுமைகளை அனுபவிக்க வேண்டிய சூழலையும் எடுத்துக் காட்டியுள்ளனர். இவற்றுள் பாரதியின் தாக்கமும் சாயலும் இழையோடி இருப்பதை இங்கு காணமுடிகிறது. பெண்ணுக்கு கிடைக்கவேண்டிய சுதந்திரமும் உரிமையும் கொடுக்கப்படாமல் மறுக்கப்பட்டபோது அதை எதிர்த்து கொடுக்கப்பட்ட மறுப்புக் குரலாக பெண்ணிற்கான எழுத்து திகழ்கின்றது. கல்வியறிவு பெற்ற பெண்கள் ஆணாதிக்கத்திற்கு

ஆளாகமல் வாழமுடியும் என்பதை முற்போக்கு சிந்தனையின் வெளிப்பாடு ஆகும். சமூகத்தில் பெண்கள் நிலை எவ்வகை தாழ்வும் இன்றி சமூக நல்லிணக்கம் உருவாக பாரதியின் வழியிலே வந்த புதுமைப் பெண் கவிகளின் படைப்பும் உறுதிசெய்கின்றன

**துணைநின்ற நூல்கள்**

1. பாரதியார், பாரதியார் பாடல்கள், , பூம்புகார் பிரசுரம், சென்னை, நான்காம் பதிப்பு - 1984
2. வெண்ணிலா, பாடும் நிலா, ராஜ ராஜேஸ்வரி புத்தகம் ஆலயம் சென்னை, 26. முதல் பதிப்பு, 2004
3. கனிமொழி, கருவரை வாசனை, விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர்- 06, முதல் பதிப்பு, 2005
4. திலகவதி, வெற்றியின் வெளிச்சம் காண், மணிமெகலை பிரசுரம், சென்னை,17, முதல்பதிப்பு, 2004.

**Reference**

1. Bharathiar, Bharathiar Songs, Poompugar Prasuram, Chennai, $4^{th}$ Edition, 1984
2. Vennila, Padum Nila, Raja Rajeswari Book Alayam, Chennai – 26, $1^{st}$ Edition, 2004
3. Kanimozhi, Karuvarai Vasanai, Vijaya Pathippagam, Coimbatore – 06, $1^{st}$ Edition, 2005
4. Thilagavathi, Vetriyin Velicham Kan, Manimegalai Prasuram, Chennai-17, $1^{st}$ Edition, 2004

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**அனு. போ " புகையிலைவிடு தூது நூலில் தொன்மம்"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 3, இதழ் 1, சனவரி 2023, பக். 35-40

**Cite this Article in English**

**Anu B" Comparative approaches in Panavidu thoothu nolgalil thoothu porul" Pulam**: International Journal of Tamilology Studies, Vol.3 Issue 1, January 2023, pp. 35-40